LIBRARY

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## EXTENSION PROGRAMME
## FIRST SEMESTER EXAMINATION IN CERTIFICATE IN BUSINESS ADMINISTRATION – 2003/2004 (MARCH – 2005)
## CBA 1033 - PRINCIPLES OF MANAGEMENT

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக                நேரம் : 3 மணித்தியாலங்கள்

---

1. கீழ்வரும் விடய ஆய்வினை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

Mr.Albert Perera ஓர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியராவார். ஓய்வுபெற்ற பின்னரும் வேலை செய்யும் முகமாகவும், வருமானம் பெறும் பொருட்டும் இவர் தனது வீட்டிற்கு முன்பாக பாதை ஓரத்தில் ஓர் சிற்றுண்டிச் சாலையினை ஆரம்பித்தார். சமையற்கலையில் ஆர்வமுள்ள இவரது மனைவி Rolls மற்றும் Sandwiches தயாரித்துக் கொடுக்கும் அதேவேளை Buns மற்றும் ஏனைய சிற்றுண்டிகள் வேறு நபர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. Mr.Albert Perera வினால் தயாரிக்கப்படும் தேனீர் அனேகமானவர்களினால் விரும்பிப்பருகப்பட்டது. அவரது வியாபாரம் முன்னேறிய அதேவேளையில் இவர் ஓட்டுனர்களைக் கவர்ந்து, அவர்களைத் தனது சிற்றுண்டிச்சாலையில் சிற்றுண்டி எடுத்து, தேனீரும் அருந்திச் செல்வதினை ஊக்குவிக்குமுகமாக ஓர் குறிப்பலகையினை (Signboard) நெடுஞ்சாலையில் இட்டார்.

இவர் தனது கட்டிடத்தினை மேலதிக தளபாடங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்தார். அத்துடன் மின் இணைப்பு பெறப்பட்டதுடன் ஓர் குளிர்சாதனப் பெட்டியும், உணவு சூடாக்கியும் (Food warmer) கொள்வனவு செய்யப்பட்டது.

ஆனால் குறுகிய காலத்தில் அவரது உடல்நிலை பாதிப்புக்குள்ளானது. இவ்வேளையில் இவரின் கேட்கும் திறன் குறைவடைந்ததுடன் வானொலி கேட்கவும் முடியாமல் போனது. இவரது மகன் பல்கலைக்கழகக் கல்வியினை நிறைவு செய்து வீட்டிற்கு வந்தார். தந்தை வியாபாரத்தில் தனது மகனை உதவி செய்யுமாறு கோரிய போது மகன் அதற்கு மறுத்துவிட்டார்.

ஓர் நாள் மகன் தந்தைக்கு பின்வருமாறு கூறினார், "அப்பா நீங்கள் செய்தி கேட்கவில்லையா? ஓர் மந்தநிலை ஏற்பட்டுள்ளது. வேலை சூழ்நிலை பயங்கரமாக உள்ளது. எரிசக்தி நிலையும் மோசமாகியுள்ளது".

இதைக் கேட்டபோது அவர் பின்வருமாறு சிந்தித்தார் "எனது மகன் பட்டதாரி, அவன் வானொலி கேட்பான், பத்திரிகை வாசிப்பான் ஆகையினால் அவனுக்கு என்னைவிட அதிகமாகத் தெரியும்".

ஆகையினால் அவர் தனது விநியோகத்தினைக் குறைத்துக் கொண்டார், அத்துடன் கடையினை நேரம் சென்று திறந்து முன்னராகவே மூடினார். அவர் குளிர்சாதனப் பெட்டியினையும், உணவு சூடாக்கியினையும் விற்றுவிட்டார். அத்துடன் விளம்பரப் பலகையினையும் நீக்கி விட்டார்.

இதன் காரணத்தினால் அவரது விற்பனை ஓர் இரவிற்குள்ளேயே குறைந்து விட்டது. ஓர் கிழமைக்குப் பின்னர் இவரது வியாபாரம் மோசமாகியது.

பின்னர் இவர் தனது மகனை அழைத்து பின்வருமாறு கூறினார் "மகனே நீ சொன்னது சரி, நாம் இப்பொழுது நிச்சயமாக மந்தநிலையிலேயே இருக்கின்றோம்".

a. Mr.Perera விற்கு தனது வியாபாரத்தினை அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பம் தொடக்கம் துணைபுரிந்த சாதகமான விடயங்கள் யாவை?

(08 புள்ளிகள்)

b. மந்தநிலை தொடர்பான செய்தியினை கேட்டபின்னர் Mr.Pereraவின் நடவடிக்கையினை நீர் நியாயப்படுத்த முடியுமா? ஆதற்கு சாதகமான அல்லது எதிரான காரணங்களை தருக?

(10 புள்ளிகள்)

c. "தொடர்பாடலில் ஏற்பட்ட குறைபாடே Mr.Pereraவின் வியாபாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணம்". நீர் இக்கூற்றை ஏற்றுக் கொள்கின்றீரா? உமது விடையினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

2. I. "ஓர் நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஓர் முகாமையாளர் பல்வேறுபட்ட பங்கினை வகிக்க வேண்டும்". முகாமையாளர்களால் பொதுவாக வகிக்கப்படும் பங்குகள் (Roles) எவை?

(05 புள்ளிகள்)

II. நிறுவன "தொலைநோக்கு", (Vision) மற்றும் குறிக்கோள் (Mission) என்னும் எண்ணக்கருக்களை விளக்குவதுடன் குறிக்கோள் கூற்றின் (Mission Statement) நோக்கத்தினை விளக்குக.

(06 புள்ளிகள்)

III. ஓர் நிறுவனத்திற்கு திட்டமிடலின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

3. I. குழுத்தீர்மானம் எடுத்தல் செய்முறையில் பிரயோகிக்கப்படும் வேறுபட்ட நுட்பங்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

II. நிறுவனத் தீர்மானம் மேற்கொள்ளலில் குழுக்களைப் பயன்படுத்துவதில் ஏற்படும் சாதக, பாதகங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

III. ஒழுங்கமைத்தல் தத்துவங்களைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

4. I. "சிறந்த தீர்வினைப் பெறுவதற்காக கட்டுப்பாட்டுச் செயன்முறை பல படிமுறைகளைக் கொண்டுள்ளது". அப் படிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

II. ஆட்சேர்ப்பிற்கும் (Recruitment), தெரிவிற்கும் (Selection) இடையிலான தொடர்பினை வரைபடத்தின் மூலம் விளக்கி மூன்றுவகையான ஆட்சேர்ப்பு (Recruitment) முறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

5. I. ஊக்கப்படுத்தலில் Maslowவின் தேவைப்படிமுறைக் கோட்பாட்டினையும், Herzberg இன் இரு காரணிக் கோட்பாட்டினையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(10 புள்ளிகள்)

II. "ஓர் முன்மாதிரியான நிறுவனத்தின் முகாமையாளர் தனது நிறுவனத்தில் பணம் மட்டுமே ஊக்கப்படுத்தல் காரணி என்கின்றார்". இலங்கையைப் பொறுத்தவரையில் இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்க.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

LIBRA